செ.வெ.எண் 754 நாள் 24-10-09

# செய்திக் குறிப்பு

## பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாச் சிறப்பு மலர் விற்பனைக்குக் கிடைக்கும்.

*****

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி தமிழக அரசின் சார்பில் நிறைவு விழாச் சிறப்பு மலர் தயாரிக்கப்பட்டு, 15.9.2009 அன்று சென்னையில் நடைபெற்ற நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

சிறப்பு மலரில் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாறு, அண்ணா அவர்கள் கலந்துகொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகள் மற்றும் புகைப்படங்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அண்ணா அவர்களுடன் கலந்து கொண்ட நிகழ்ச்சித் தொகுப்புகள், புகைப்படங்கள் மற்றும் கவிதாஞ்சலி, மாண்புமிகு மத்திய–மாநில அமைச்சர் பெருமக்களின் கட்டுரைகள், கவிஞர்கள், அறிஞர்கள், பெருமக்களின் கவிதைகள் மற்றும் கட்டுரைகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

பல்வேறு சிறப்புகளை உள்ளடக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாச் சிறப்பு மலர் சென்னை, 110. அண்ணாசாலை, எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையர் அலுவலக வளாகத்திலுள்ள 'தமிழரசு' அலுவலகம்; சென்னை, மெரினா கடற்கரை அண்ணா சதுக்க செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்; நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் மற்றும் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை தரைத்தளத்தில் உள்ள வரவேற்பு அலுவலகம் ஆகிய இடங்களில் விற்பனைக்குக் கிடைக்கும். சிறப்பு மலர் ஒன்றின் விலை ரூ.500 ஆகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாச் சிறப்பு மலர் தேவைப்படுவோர் அலுவலக நாட்களில் மேற்கண்ட அலுவலங்களில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

23X09.
இ.இ (செ)

23/X/2009
இ/செ.ம.

(திரு சி. காமராஜ், இ.ஆ.ப
இயக்குநர், செய்திமக்கள்
தொடர்பு மற்றும் அரசுவழி
அரசு துணைச் செயலாளர்)

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9